# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,237 — 1936 ம் ஹு ஆடிமீ 31 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1901 ம் ஆண்டின் நாய்களைப் பதிவுசெய்வதைப்பற்றிய சட்டம்.

நாய்களைப் பதிவுசெய்வதைப்பற்றிய 1901 ம் ஆண்டின் 25 ம் இலக்கச் சட்டத்தின் 5 ந்தாம் 6 ம் பிரிவுகளின்படி புத்தளம் சலாப டிஸ்திறிக்கைச் சேர்ந்த சுகாதார சங்கத்தாரால் உண்டாக்கப்பட்ட உபவிதிகள்.

ஏ. ஈ. கிறிஸ்தோபலஸ்,
அக்கிராசனர்.

புத்தளம் கச்சேரி,
1936 ம் ஆண்டு ஆடிமீ 20 ந் உ.

உபவிதிகள்.

1. புத்தளம் சலாபம் டிஸ்திறிக்கைச்சேர்ந்த எந்தச் சுகாதார சங்கப் பட்டணத்து எல்லைக்குள் நிற்கும் ஒவ்வொரு ஆண் நாய்க்கும், பெண் நாய்க்கும் அந்த நாயை வைத்திருப்பவர் அல்லது அதற்குப் பொறுப்பாளியாயிருப்பவர் பதிவுப் பணமாக 25 சதமும் 50 சதமும் முறையே வருஷ வீதம் கட்டுதல்வேண்டும். இந்த உபவிதியின் நோக்கத்திற்காக ஒரு வருஷம் என்பது சித்திரைமீ 1 ந் திகதி தொடக்கம் அடுத்த வருஷம் பங்குனிமீ 31 ந் திகதி வரையிலும் உள்ள காலம் எனக் கணக்கிடப்படும்.

2. அப்பட்டணத்திற்குள் நாய் நிற்கும் வீட்டிற் கதிகாரியாயுள்ள ஒவ்வொருவரும் அந்தந்த வருஷத்தில் தைமீ 31 ந் திகதிக்கு முந்தியே சுகாதார சங்கத்தாரின் அக்கிராசனரால் நியமிக்கப்பட்ட வரியறவிடுபவரிடம் தம்மிடத்திலுள்ள ஆண் அல்லது பெண் நாயை குறித்த விவரங்கள் இத்துடன் அணைக்கப்பட்டிருக்கும் "A" என்னும் அடையாளமிடப்பட்ட பத்திரத்திலே நிரப்பிக்கொடுத்தல் வேண்டும்.

3. "B" என்னும் அடையாளமிடப்பட்ட சேட்டிவிக்கட் பத்திரமொன்று பதிவுப் பணம் பெற்றவுடனே குறித்த வரி அறவிடுபவருக்கு அல்லது சுகாதார சங்கத்தாரின் கந்தோரில் கொடுக்கப்படும்.

4. (1) (*a*) தன்து அபிப்பிராயப்படி ஒரு ஆண் அல்லது பெண் நாய் மிகவும் நோய்பட்டதாயும் அதைப் பிடித்திருக்கும் நோய் மறு நாய்களுக்குத் தொத்தக்கூடியதாயும் இருக்குமாகில், அல்லது

(*b*) வயது முதிர்ந்து நோய்ப்பட்டு அல்லது ஊறடைந்து இருப்பதனால் அது உயிரோடு இருப்பது நன்றன்று என்பதாகக் காணப்படுமாகில் வரி அறவிடும் உத்தியோகஸ்தர் பதிவு சேட்டிவிக்கட் பத்திரம் கொடுக்க மறுக்லாம்.

(2) அல்லது வரி அறவிடும் உத்தியோகஸ்தர் நாயின் நிலைக்குத் தக்க நிபந்தனைகளோடு சேட்டிவிக்கேற் பத்திரங்கொடுக்கலாம். இங்ஙனம் கொடுக்கவில்லை என்றேனும் நிபந்தனைகள் விதித்தாரென்றேனும் எவராவது திருப்தியீனப்பட்டால் அவர் சுகாதாரச் சங்கத்தாரின் அக்கிராசனரிடம் அப்பீல் முறையீடு செய்து கொள்ளலாம். அவ்வக்கிராசனர் அதை உறுதிப்படுத்தலாம், மாற்றலாம், அல்லது அழித்துவிடலாம்.

(5) ஒவ்வொரு பதிவுச் சேட்டிவிக்கேற் பத்திரத்திலும் பின்வரும் நிபந்தனைகள் அச்சிடப்பட்டிருக்கும், அவையாவன :—

(*a*) குறித்த நாய் மிகவும் நோய்பிடித்திருப்பதால் அல்லது அங்கவீனப்பட்டிருப்பதால் அது உயிரோடுருப்பது நல்லதல்லவென்றும் அக்கிராசனர் கண்டால்,

(*a*) சொந்தக்காரன் அந்த நாயைக்கொடுமையாக நடத்துகிறதாக அல்லது கவனியாதுவிடுகிறதாக அக்கிராசனர் கண்டால்,

(*b*) குறித்த நாய் தொத்து வியாதியினால் பீடிக்கப்பட்டிருக்கிறபோது சொந்தக்காரன் அதை மற்றும் நாய்களோடு ஊடாடித் திரிய விட்டால், சுகாதார சங்கத்தாரின் அக்கிராசனரால் இச்சேட்டிவிக்கேற் பத்திரம் அழித்துவிடப்படுவதற்கு இடமானதாகும்.

6. (*a*) சேட்டிவிக்கேற் பத்திரந் கொடாது விடப்பட்ட அல்லது,

(*b*) அப்பத்திரத்தில் எழுதியுள்ள நிபந்தனை யொன்று நிறைவேற்றப்படாததினால் சேட்டிவிக்கேற் பத்திரம் அழித்துவிடப்பட்ட ஆண் அல்லது பெண் நாயை வைத்திருப்பவர் அறிவித்தலில் குறிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் அந்நாயைக் கொண்டுவந்து சுகாதார சங்கத்தாரின் அதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தரிடம் ஒப்புவித்தல் வேண்டும். அக்கிராசனர் அந்த நாய்களின் விஷயத்தில் என்ன செய்யவேண்டுமென்று தீர்மானிக்கிறரோ அவ்வண்ணமே செய்தல் வேண்டும்.

ஃபோம் A.

நாய்களைக் குறித்த உபவிதிகளின்படி எழுதிக்கொடுக்கவேண்டிய விவரப்பத்திரம் :—

வீட்டிலக்கம் :————.

தெரு :————.

வீட்டுக்காரருடைய பெயர் :————.

| வீட்டிலுள்ள நாய்களின் தொகை. | விவரம். | | | | | | சொந்தக்காரன் பெயர். | பணங்கட்டிய திகதி. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சாதி. | ஆணோ பெண்ணோ | நிறம். | கழுத்தின் அளவு. | ஏதும் விசேஷ அடையாளம். | குறிப்பு. | | |
| | | | | | | | | மார்ச்மீ 31 ந் திகதி அல்லது அதற்குமுன். |

அறிவித்தல் ஒப்புவித்த தேதி :————.

புத்தளம் கச்சேரி,

193 — ம் ஆண்டு ————மீ —— ந உ.

————

வீட்டுக்கானுடைய கையொப்பம்.

மேற்சொல்லிய வீட்டுக்காரன் மேலேயுள்ள போர்ம் பத்திரத்தை ஒரு கிழமைக்குள் நிரப்பி அனுப்பும்படி கேட்கப்படுகிருர் அப்படிச் செய்யத் தவறும் எவரும் ரூபாய் 20 தெண்டம் இறுப்பதற்குப் பாத்திரர் ஆவார்.

————

அககிராசனர்.

புத்தளம் கச்சேரி,
193 — ம் ஆண்டு ———— மீ —— ந உ.

போர்ம் B.

நாய்களைப் பதிவுசெய்வதைப்பற்றிய சேட்டிவிக்கேற பத்திரம் பதியப்பட்ட இலக்கம் :————.
தெரு :————.

———— இலக்க வீட்டிலிருக்கும் ———— என்பவர் கீழே விவரிக்கப் பட்டிருக்கும் மாதிரியான ஒரு ஆண்/பெண் நாயை இன்று இக்கந்தோரிற் பதிவுசெய்திருக்கிருர் என்றும் அதற்காக சதம் ———— பதிவுப் பணமாய்க் கட்டப்பட்டிருக்கின்றதென்றும் இதனுல் உறுதிப்படுத்துகின்றது.

நாயின் விவரம்.

சாதி :————.
ஆணே பெண்ணே :————.
நிறம் :————.
கழுத்தின் அளவு :————.
ஏதும் விசேஷ அடையாளம் :————.

இந்த சேட்டிவிக்கேற் பத்திரம் 193 — ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ந் திகதி வரைக்கும் பெலப்புடையதாயிருக்கும்.

————

அக்கிராசனர்.

புத்தளம் கச்சேரி,
193 — ம் ஆண்டு ———— மீ —— ந உ.

## காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 1,353 (குருணுக்கல்).

இதனேடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1936 ம்ஞூ ஆடிமீ 31 ந தேதியிலிருந்து மூன்று மாதகாலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனுல் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1936 ம் ஞூ ஆனிமீ 11 ந தேதியிலன்று குருணுக்கல் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

எச். சீ. கொக்ஸ்,
உதவி அரசாட்சி ஏசன்ரர்,
குருணுக்கல் டிஸ்திறிக்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம். வடமேல் மாகாண அரசாட்சி ஏஜன்ரர் அவர்களிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை

கீழ் சொல்லப்படும் காணித்துண்டுகள் வடமேல் மாகாணத்தில் குருணுக்கல் டிஸ்திறிக்கில் வன்னி ஹதபத்திவில மீஓயன் எகொடகோறளையில் ராசகனே (பாளு) கல்கடவல என்னும் கிராமத்தில் இருக்கின்றன:—

பிரதமபட இலக்கம். A. 256.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|
| 1 | ராசகனேமூக்கலான .. | .. 8 2 19 |
| 2 | ஷை .. | . 16 3 10 |
| | | .. 25 1 29 |

எல்லைகள் : வடக்கே-முடி உரித்தாடும் ராசகனமூக்கலான ; கிழக்கே-முடி உரித்தாடும் ராசகனயும் ராசகனமூக்கலானவும் ; தெற்கே-முடி உரித்தாடும் ராசகனமூக்கலானவும், கலகடவல என்னும் கிராமத்து எல்லையும் ; மேற்கே-கல்கடவல என்னும் கிராமத்து எல்லையும், மனிக் ஹாமியும், மறுபேருக்கும் உரிய 203,468 ம் இலக்க உரிதிப்படத்தில் காட்டப்பட்டவைக்கும், முடி உரித்தாடும் ராசகனேமூக்கலானவும், கீரிய ககெலேயும்.

————

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 1,354 (குருணுக்கல்).

இதனேடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1936 ம் ஞூ ஆடிமீ 31 ந தேதியிலிருந்து மூன்று மாதகாலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியயன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனுல் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1936 ம் ஞூ ஆனிமீ 11 ந தேதியிலன்று குருணுக்கல் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

எச். சீ. கொக்ஸ்,
உதவி அரசாட்சி ஏஜன்ரர்,
குருணுக்கல் டிஸ்திறிக்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விவரம் வடமேல் மாகாண அரசாட்சி ஏஜன்ரர் அவர்களிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனரல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க

அட்டவணை.

கீழ் சொல்லப்படும் காணித்துண்டு வடமேல் மாகாணத்தில் குருணுக்கல் டிஸ்திறிக்கில் வன்னி ஹதபத்துவில் மீஓயன் எகொட கோறளையில் கல்கடவல என்னும் கிராமத்தில் இருக்கின்றது.

பிரதமபட இலக்கம் A 256.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|
| 3 | ராசன்கனேமூக்கலான .. | .. 3 1 0 |

எல்லைகள் : வடக்கே-ராசகனே (பாளு) கல்கடவல என்னும் கிராமத்து எல்லையும், முடி உரித்தாடும் ராசகனேமுகலானுவும் ; கிழக்கிகே மேற்கே தெற்கேயும்-முடி உரித்தாடும் கனேமூகலான.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் ட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கல்முனே சுகாதார சங்கத்திற்குரிய கடைகளுக்குத் திருத்தங்கள் செய்வதற்கும் ஓர் இறைச்சிக்கடை கட்டுவதற்கும், என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 228. குறிச்சி—கல்முனே.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | பிசரின் தோட்டம் .. | ஓர் தென்னைமரமும், கிணறும் இவ்வளவில் இருக்கின்றன | கல்முனையில் இருக்கும் வேலுப்பிள்ளை ருமலிங்கம் .. | 0 0 35·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்கு கற்பனைசெய்திருப்பதனுல் அககாணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1936 ம் ஞூ ஆவணிமீ 24 ந தேதியிலன்று 10 மணிக்கு கல்முனே வாடி வீட்டில் என் முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்கணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தை ளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின்தொனைப கயும்விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்பு கச்சேரி,
1936 ம் ஞூ ஆவணிமீ 23 ந உ.

சி. சிற்றம்பலம்,
உதவி அரசாட்சி ஏசண்டு, மட்டக்களப்பு.

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும், காணிகளை அஃதாவது :—

உபபடம் நொ. 1, கிராமகடைசிப்படம் நொ. 19. குறிச்சி—நெடுங்குடா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 57 | நெடுங்குடா வளவு | 60 வருடஞ்சென்ற 21 தென்னமரங்களும், 15 வருடம்சென்ற ஒரு தென்னமரமும், 4 வருடஞ்சென்ற 76 தென்னம்பிள்ளை களும், 50 வருடஞ்சென்ற 2 பனைமரங்களும், 4 வருடஞ்சென்ற 26 கொய்யாமரங்களும், 4 வருடஞ்சென்ற ஒரு மாதுளமரமும், 4 வருடஞ்சென்ற 4 அணினுனமரங்களும், 3 வருடஞ்சென்ற 3 முந்திரியமரங்களும், 15 வருடஞ்சென்ற ஒரு புளியமரமும், 35 முருங்கைமரங்களும், கிடுகால்வேயப்பட்ட ஒரு மண்குடிசை யும், கிடுகால்வேயப்பட்டுத் தகரத்தால் அடைக்கப்பட்ட 2 குடிசை களும், கிடுகால்வேயப்பட்ட ஒரு வீடும், கிடுகால்வேயப்பட்ட 2 கொட்டில்களுமடங்கிய ஒரு தென்னந்தோட்டம் | நெடுங்குடாவிலிருக்கும் மதார்முகம் துக்காசிம் | 0 2 22·1 |
| 58 | ஷை .. | 60 வருடஞ்சென்ற 5 தென்னமரங்களும், 4 வருடஞ்சென்ற 4 தென்னம்பிள்ளைகளும், ஒரு வருடஞ்சென்ற 59 தென்னம் பிள்ளைகளும், 25 வருடஞ்சென்ற 4 புளியமரங்களும், 2 வரு டஞ்சென்ற 3 பிலாமரங்களும், 2 வருடஞ்சென்ற 4 மாமரங்க ளும், குடியிருக்கும் ஓர் வீடும், கடையுமடங்கிய ஒரு தென்னந் தோட்டம் | நெடுங்குடாவிலிருக்கும் செயிலாப்தீன் ஜெயினுதீனும், இசுமாயில்சாய்புவின் பெண் கிச்சில்உம்மாவும் | 0 2 33·6 |
| 59 | ஷை .. | 40 வருடம்சென்ற 23 தென்னமரங்களும், 1, 2 வருடஞ்சென்ற 43 தென்னம்பிள்ளைகளும், 40 வருடஞ்சென்ற 4 பனைமரங்க ளும், 4 முருங்கைமரங்களும், கிடுகால்வேயப்பட்ட ஒரு வீடும், கிடுகால்வேயப்பட்ட ஒரு கொட்டிலுமுள்ள ஒரு தென்னந்தோட் டம் | நெடுங்குடாவிலிருக்கும் மதார் கம்சா உம்மா | 0 1 20 |
| 60 | நெடுங்குடாத் தோட்டம் | சேனை .. .. .. | (1) வேப்பங்குடாவிலிருக்கும் முகம்மதுத் தாயார் முஸ்தாப்பா காசிதீன், (2) சீனுக்குடாவிலிருக்கும் கமுதுலெவ்வை கஜியார்உம்மா, (3) சீனுக்குடாவிலிருக் கும் கமுதுலெவ்வை ஜமால்தீன், (4) கவாட்டிகுடாவிலிருக்கும் றஜபு அப்பாஸ் | 0 0 11 |
| 61 | ஷை .. | 50, 60 வருடஞ்சென்ற 14 தென்னமரங்களும், 40 வருடஞ் சென்ற ஒரு பனைமரமும், 25 வருடஞ்சென்ற 3 புளியமரங்க ளும், 10 வருடஞ்சென்ற 3 புளியமரங்களும், 40 வருடஞ்சென்ற ஒரு முதிரைமரமுமுள்ள அழிந்துகிடக்கும் ஒரு தென்னந் தோட்டம் | ஷை .. .. | 0 3 20·6 |
| 62 | ஷை .. | 60 வருடஞ்சென்ற 3 தென்னமரங்களும், 40 வருடஞ்சென்ற 2 பனைமரங்களும், 25 வருடஞ்சென்ற 3 புளியமரங்களும், 10 வருடஞ்சென்ற 3 புளியமரங்களும், 10 வருடஞ்சென்ற 2 முதிரைமரங்களும், அழிந்துகிடக்கும் ஒரு தென்னந்தோட்டம் | (1) நாச்சிக்குடாவிலிருக்கும் வாவா இசுமாயில், (2) மக்கிளடி ஊத்தி லிருக்கும் வாவாமுகம்மது இபுறுகிம், (3) மக்கிளடி ஊத்திலிருக்கும் வீ. நூறும்மா, (4) மக்கிளடிஊத்திலிருக் கும் மெய்யதீன் நாச்சியா | 0 2 38 |
| 63 | ஷை .. | 50 வருடஞ்சென்ற 3 தென்னமரங்களும், 40 வருடஞ்சென்ற 14 பனைமரங்களும், 40 வருடஞ்சென்ற 3 புளியமரங்களும், 5, 8 வருடஞ்சென்ற 8 முதிரைமரங்களுமுள்ள அழிந்துகிடக்கும் ஒரு தென்னந்தோட்டம் | (1) வேப்பங்குடாவிலிருக்கும் முகம்மதுத் தாயார் முஸ்தபா காசிதீன், (2) சினுக் குடாவிலிருக்கும் கமுதுலெவ்வை கஜியார்உம்மா, (3) சினுக்குடாவிலிருக் கும் கமுதுலெவ்வை ஜமால்தீன், (4) கவாட்டிக் குடாவிலிருக்கும் றஜபு அப்பாஸ் | 0 2 34 |
| 64 | ஷை .. | 50 வருடஞ்சென்ற ஒரு தென்னமரமுள்ள சேனை .. | ஷை .. .. | 0 0 38 |

உபபடம் நொ. 1, கிராமக்கடைசிப்படம் நொ. 21. குறிச்சி—நாச்சிக்குடா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 234 | சின்னக்குளம், விசுவலிங் கம் தோட் டம் | 20 வருடஞ்சென்ற 31 தென்னமரங்களும், 2, 3 வருடஞ்சென்ற 23 தென்னம்பிள்ளைகளுல், 30, 40 வருடஞ்சென்ற 15 பனை மரங்களும், முள்ளுக்கம்பிவேலியுள்ள ஒரு தென்னந்தோட்டம் | திரிகோணமலையிலிருக்கும் எல். எச். எல். ஞேனிஸ் டி சில்வா | 1 1 30 |
| 235 | நாச்சியாகுடாத் தோட்டம் | 60 வருடஞ்சென்ற 16 தென்னமரங்களும், 20 வருடஞ்சென்ற 75 தென்னமரங்களும், 50 வருடஞ்சென்ற 40 பனைமரங்களும், 8 வருடஞ்சென்ற 8 பனைமரங்களும், 20 வருடஞ்சென்ற 4 புளியமரங்களும், 10 வருடஞ்சென்ற ஒரு புளியமரமும், 20 வருடஞ்சென்ற ஒரு முந்திரியமரமும், கிடுகால்வேய்யபட்ட 2 குடிசைகளும், முள்ளுக்கம்பிவேலியுள்ள ஒரு தென்னந் தோட்டம் | (1) அப்துல் றசாக் ஆலிம் கைம்பெண் முகம்மது நாச்சியா, (2) அப்துல் றசாக் ஆலிம் முகம்மது அபூபக்கர், (3) அப்துல் றசாக் ஆலிம் பட்டிலாஉம்மா, எல்லாரும் திரிகோணமலை 7 ம் பகுதி யிலிருப்பவர்கள் | 2 1 11·2 |
| 236 | ஷை .. | 50 வருடஞ்சென்ற ஒரு தென்னமரமும், 1, 5 வருடஞ்சென்ற 4 தென்னம்பிள்ளைகளும், 50 வருடஞ்சென்ற 13 பனைமரங்க ளும், 5 முருங்மைமரங்களும், 3 வருடஞ்சென்ற ஒரு மாதுள மரமும் கிடுகால் வேயப்பட்ட 3 குடிசைகளுமுள்ள ஒரு தோட்டம் | நாச்சிக்குடாவிலிருக்கும் வாவாக் காசிம் அப்துல் லத்திவ் | 0 3 20·5 |
| 237 | ஷை .. | 50 வருடஞ்சென்ற 2 பனைமரமும், கிடுகால்வேயப்பட்ட ஒரு குடி சையுமுள்ள தோட்டம் | (1) அப்துல் றசாக் ஆலிம் கைம்பெண் முகம்மது நாச்சியா, (2) அப்துல் றசாக் ஆலிம் முகம்மது அபுபக்கர், (3) அப் துல் றசாக் ஆலிம் பட்டிலாஉம்மா, எல்லாரும் திரிகோணமலை 7 ம் பகுதி யிலிருப்பவர்கள் | 0 0 33·6 |
| 238 | ஷை .. | 50 வருடஞ்சென்ற 6 தென்னமரங்களும், 5 வருடஞ்சென்ற ஒரு தென்னம்பிள்ளையும் கிடுகால்வேயப்பட்ட ஒரு தோட்டம் | (1) முகைதீன் வாவா ஜலால்தீன், (2) முகைதீன் வாவா அப்துல் ஜபார், (3) முகைதீன் வாவா சமசுதீன், (4) முகை தீன் வாவா மரியாம்பீபி, (5) முகை தீன் வாவா றுக்கிஅம்மா, எல்லாரும் நாச்சிக்குடாவிலிருப்பவர்கள் | 0 0 11 |

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 239 | நாச்சிக்குடாத் தோட்டம் | 40 வருடஞ்சென்ற 6 தென்னமரங்களும், 6 வருடஞ்சென்ற 27 தென்னம்பிள்ளைகளும், 50 வருடஞ்சென்ற 6 பனைமரங்களும், ஒரு எலுமிச்சைமரமும், 2 முருங்கை மரங்களும், கிடுகால் வேயப்பட்ட ஒரு மண்குடிசையும், கிடுகால் வேயப்பட்ட 2 குடிசைகளும், கிடுகால் வேயப்பட்ட ஒரு கொட்டிலுமுள்ள ஒரு தோட்டம் | (1) அப்துல் பாகார்தீன், (2) ஜி. ஜமால்தீன் பெண் செய்னப்புஉம்மா இருவரும் நாச்சிக்குடாவிலிருப்பவர்கள் | 0 1 18·7 |
| 240 | நாச்சிக்குடா வளவு | 50 வருடஞ்சென்ற 8 பனைமரங்களும், 6 வருடஞ்சென்ற ஒரு தென்னமரமுமுள்ள பனந்தோட்டம் | (1) திரிகோணமலை 4 ம் பகுதியிலிருக்கும் உதுமான் உதுமான்சா, (2) பேராத்துவெளியிலிருக்கும் பக்கீர் முகம்மது | 0 3 32·6 |
| 241 | நாச்சிக்குடாத் தோட்டம் | 50 வருடஞ்சென்ற 18 தென்னமரங்களும், 12, 15 வருடஞ்சென்ற 102 தென்னமரங்களும், 5, 7 வருடஞ்சென்ற 13 தென்னமரங்களும், 50 வருடஞ்சென்ற 24 பனைமரங்களும், 60 வருடஞ்சென்ற ஒரு புளியமரமும், 40, 47 வருடஞ்சென்ற 3 மாமரங்களும், 35 வருடஞ்சென்ற ஒரு வேப்பமரமும், 58 முருங்மைகரங்களும், கிடுகால்வேயப்பட்ட 4 வீடுகளும், புது றேட்டிஞெரு பகுதியும், முள்ளுக்கம்பிவேலியும், 4 வருடஞ்சென்ற ஒரு முந்திரியமரமுள்ள ஒரு தென்னநதோட்டம் | ஷெ .. .. | 2 1 28·2 |
| 242 | வண்ணன் வளவு | 30 வருடஞ்சென்ற ஒரு பனைமரமும், புது றேட்டிஞெரு பகுதியுமுள்ள வெளியான தரிசு நிலம் | திரிகோணமலை 1 ம் பகுதியிலிருக்கும் கபீபு பகார்தீன் | 0 1 39·9 |
| 243 | ஷெ .. | 25 வருடஞ்சென்ற ஒரு மாமரமும், 15 வருடஞ்சென்ற ஒரு வேப்பமரமும், புது றேட்டின் ஒரு பகுதியும் பள்ளிவாசலுமுள்ள ஒரு வளவு | ஷெ .. | 0 0 17·4 |
| 244 | நாச்சுகுடா வளவு | 50, 60 வருடஞ்சென்ற 9 தென்னமரங்களும், 10, 20 வருடஞ் வருடஞ்சென்ற 140 தென்னமரங்களும், 5 வருடஞ்சென்ற 7 தென்னம்பிள்ளைகளும், 15 வருடஞ்சென்ற 3 முந்திரியமரங்களும், 2 வருடஞ்சென்ற ஒரு மாமரமும், 9 முருங்கைமரமும், கிடுகால்வேயப்பட்ட 2 வீடுகளும், கிடுகால்வேயப்பட்ட ஒரு கொட்டிலுமுள்ள தென்னந் தோட்டம் | திரிகோணமலை 4 ம் பகுதியிலிருக்கும் உதுமான் உதுமான்சா .. | 1 2 25·3 |
| 245 | ஷெ .. | 60 வருடஞ்சென்ற ஒரு தென்னமரமுள்ள தோட்டம் .. | மக்கிளடிஊத்திலிருக்கும் றஜபு றசாக் பெண் கனிவாஉம்மா | 0 1 25 |
| 246 | ஷெ .. | 50 வருடஞ்சென்ற 5 தென்னமரங்களும், கிடுகால்வேயப்பட்ட ஒரு வீடுமுள்ள தோட்டம் | நாச்சிக்குடாவிவிருக்கும் அப்துல் பகார்தீன் | 0 0 18·8 |
| 247 | ஷெ .. | 15 வருடஞ்சென்ற 2 வேப்பமரங்களுள்ள வெளியான தரிசு நிலம் | ஷெ .. .. | 0 3 16 |
| 248 | ஷெ .. | 50–60 வருடஞ்சென்ற 17 தென்னமரங்களும், 20–25 வருடஞ்சென்ற 24 தென்னமரங்களும், 3–5 வருடஜ்சென்ற 24 தென்னம்பிள்ளைகளும், ஒரு வருடஞ்சென்ற 22 தென்னம்பிள்ளைகளும், 50 வருடஞ்சென்ற 2 பனைமரங்களும், 10 வருடஞ்சென்ற ஒரு வேப்பமரமும், 8–10 வருடஞ்சென்ற 2 தோடமரங்களும், கிடுகால் வேயப்பட்ட ஒரு மண்வீடும், கிடுகால் வேயப்பட்ட 2 கொட்டில்களுமுள்ள தென்னந் தோட்டம் | (1) நாச்சிக்குடாவிலிருக்கும் காதர்சாய்பு பக்கீர்தம்பி, (2) நாச்சிக்குடாவிலிருக்கும் அப்துல் பகார்தீன் | 1 0 23·2 |
| 249 | ஷெ .. | 60 வருடஞ்சென்ற 2 தென்னமரங்களும், ஒரு வருடஞ்சென்ற 53 தென்னம்பிள்ளைகளும், 15 வருடஞ்சென்ற ஒரு வேப்பமரமும் முள்ளுக்கம்பிவேலியுமுள்ள தென்னந் தோட்டம் | சீனக்குடாவிலிருக்கும் மதார்சா ஜெயிலபுதீன் | 0 2 22 |
| 250 | நாச்சிக்குடா வளவு | 3 வருடஞ்சென்ற 43 தென்னம்பிள்ளைகளும், 3 வருடஞ்சென்ற 2 முந்திரிமரங்களும், 2 வருடஞ்சென்ற ஒரு பிலாக்கன்றும், 12 முருங்கைமரங்களும், ஒரு குடிசையுமுள்ள தென்னந்தோட்டம் | நாச்சிக்குடாவிலிருக்கும் பக்கீர்பிச்சை தம்பி | 0 2 24 |
| 251 | கரைச்சிவயல் | 50 வருடஞ்சென்ற ஒரு பனைமரமும், ஒரு கட்டுக்கிணறும், உள்ள அழிந்துகிடக்கும் நெல்வயல் | திரிகோணமலை பிஸ்பாண்டவர் .. | 9 1 29·6 |
| 252 | வன்னுகேணி வளவு | 50 வருடஞ்சென்ற 8 பனைமரங்களும், 45 வருடஞ்சென்ற ஒரு புளியமரமுமுள்ள அழிந்துகிடக்கும் பனந்தோட்டம் | ஷெ .. .. | 0 2 16·6 |
| 253 | பள்ளிவாசல் காடு | பத்தைக்காடு .. .. | (1) மக்கிஹூற்றிலிருக்கும் எல். எம். எஸ் முகம்மது மதார், (2) கிண்ணியாவிலிருக்கும் எல். எம். எஸ். முகம்மது செரிவ், (3) நாச்சிக்குடாவிலிருக்கும் எல். எம். எஸ். காத்தூம் | 0 1 27 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1976 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேச்கின்ற சகலரும் நேரமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1936 ம் ௵ ஆவணி மாசம் 28 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு திரிகோணமலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

திரிகோணமலைக் கச்சேரி,
1936 ம் ௵ ஆடிமீ 23 ந் உ.

சீ. ஈ. ஜோன்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## நகரசங்க அங்கத்தவரை தெரிவுசெய்தல்.

நீர்கொழும்பு நகரசங்கத் தெரிவு, 1936.

நீர்கொழும்பு நகரசங்கத்துக்கு அங்கத்தவர்களாய் தெரிவுசெய்தற்கு தகுதியுடையவர்களின் டாப்பும் அவ்வங்கத்தவரை தெரிவுசெய்யும் தகுதி உடையவர்களின் டாப்பும் மேற்படி சங்கக் கந்தோர் நேரத்தில் பார்வைக்காய் வைக்கப்பட்டிருக்கிறது. 1936 ம் ௵ புரட்டாதிமீ 9 ந் திகதி பகல் 10 மணிக்கு மேற்சொல்லிய கந்தோரில் மேல் மாகாண அரசாட்சி ஏசன்றர் டாப்பில் ஏதும் பெயரைச் சேர்ப்பதற்கும் அல்லது டாப்பிற் சேர்க்கக்கூடாதென்பதிற்கும் உள்ள உரித்துகளை விசாரிப்பதற்கும் வந்திருப்பார்.

2. 1920 ம் ஆண்டின் 11 ம் இலக்கச் சட்டத்தின் 29 (3) ம் பிரிவைக் கவனிக்கவேண்டியது. எவர் ஒருவருடைய பெயரை ஏனும் டாப்பில் பதிவுசெய்தற்கு மறுப்பு இருந்தால் அப்படிப்பட்டவருக்கு விசாரணைக்கு ஏழு நாளைக்குமுன் கீழே கையொப்பமிட்டவர் எழுத்தில் நோட்டிஸ் கொடுத்தல் வேண்டும். ஆகையால் மேற்சொல்லிய பிரிவின்படி நோட்டீஸ் கொடுப்பதற்கு அப்பேர்ப்பட்ட நோட்டிஸ் 1936 ம் ஆண்டு ஆவணிமீ 25 ந் திகதியில் அல்லது அதற்குமுன் கீழே கையொப்பமிட்டவருக்கு கிடைத்தல் வேண்டும்.

ஆர். எம். எம். வூர்ஸ்லி,
மேல் மாகாண அரசாட்சி ஏசன்றர்.

கொழும்புக் கச்சேரி,
1936 ம் ௵ ஆடிமீ 27 ந் உ.

---

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.